ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2252/34 - 2021 නොවැම්බර් මස 03 වැනි බදාදා - 2021.11.03

*2252/34 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***04 ஆவது திருத்தம்***

**இலங்கை நிலஅளவையாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2018 திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய மற்றும் 2103/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிலஅளவையாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, ஒற்றோபர் 27.*

1A – G 35276 – 15 (2021/11)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பகுதி I

திருத்த இலக்கம் 01 - 2019 ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய மற்றும் 2143/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 02 - 2020 சனவரி மாதம் 23 ஆந் திகதிய மற்றும் 2159/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 03 - 2021 யூன் மாதம் 30 ஆந் திகதிய மற்றும் 2234/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

பகுதி II

18.1 இடைக் காலப் பகுதியில் மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2.1 இன் (V) அல்லது 10.3.1 இன் (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாற்றுவழித் தகைமைகளாக நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் நில அளவையியல் தொடர்பான உயர் டிப்ளோமாப் பாடநெறி அல்லது நில அளவையியல் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி அல்லது இதனை ஒத்த அல்லது அதிலும் உயர்வான நில அளவையியல் தொடர்பான பாடநெறி ஒன்றோ ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு

1. மேற்குறித்த தகைமைகளுக்கு அமைவாக விசேட தரத்திற்குப் பதவியுயர்வைப் பெற்றுக் கொள்ளத் தகைமை பெறும் உத்தியோகத்தர் ஒருவர் நில அளவையாளர் நாயகத்துடன் மேற்கொள்ளும் ஒப்பந்தத்தின் விடயப் பரப்பு தொடர்பிலான எழுத்துமூல ஆய்வுக் கட்டுரையொன்றை நில அளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இடைக்கால ஏற்பாடுகள் வலுவிலிருக்கும் இறுதித் தினமான 2023.12.24 ஆம் திகதி வரை மாத்திரமே எழுத்துமூல ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

2. மேற்குறித்த 1 இல் குறிப்பிடப்பட்டவாறு எழுத்துமூல ஆய்வுக் கட்டுரையொன்றை சமர்ப்பித்து ஏற்புடைய குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை 18.1 இன் கீழான தகைமைகளுக்கு அமைவாக விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தப்படும் உத்தியோகத்தர்களின் சம்பளவேற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.